பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 20 திங்கட்கிழமை (04-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 39

# பூநகரிப் பாதையைத் திறப்பது பற்றி ஜெனிவாவில் தீவிர ஆலோசனை

## ஐ.நா.அகதிகள் தூதரகத்தின் அதிகாரிகள் துரித முயற்சி

யாழ்ப்பாணம், ஜனவரி 4

யாழ். குடாநாட்டுடனான போக்குவரத்தைச் சிர்செய்வதற்காக பூநகரிப் பாதையை திறப்பது குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகத்தில் ஆராயப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐ. நா. தூதரக அதிகாரிகள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, தமது அமைப்பு குடாநாட்டில் சேவையாற்றுவதற்கு முன்னோடி நடவடிக்கையாக குடாநாட்டுடனான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்க வேண்டும் என்ற கருத்தை விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடம் முன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கிழக்கிலும் மோதல்

கொழும்பு, ஜன. 4

மட்டக்களப்பு முனைப்பாட்டில் படையினருக்கும் புலிப் போராளிகளுக்கும் இடையே நேற்று மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிர்ச் சேதம் ஏற்பட்ட தாகவும் செய்திகள் தெரிவித்தன.

(ஒ-எ)

### கடந்த வருடம் நடந்த போர்:

## 1,000 படையினரின் சடலங்கள் கொழும்புக்கு வந்துசேர்ந்தன!

### பொலித்தீன் பொதிகளிலும் வந்தன

கொழும்பு, ஜன.4

கடந்த ஆண்டு வடக்கு - கிழக்கில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் உயிரிழந்த ஆயிரத்து மூன்று படையினரின் சடலங்கள் கொழும்புக்கு விமானங்கள் மூலம் கொண்டு வரப்பட்டன.

அநேகமான சடலங்கள் பொலித்தீன் பைகளில் பொதிகளாகக்கட்டப்பட்டு கொண்டு வரப்பட்டன.

அரசு சார்புப் பத்திரிகையான ''டெய்லி நியூஸ்'' இத்தகவலை வெளியிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 7 ஆயிரத்து 625 படையினர் போர்க்களத்தில் காயமடைந்தனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுத் தாக்குதல்களில் ஆயிரத்து 461 படையினர் கொல்லப்பட்டதாகப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

புலிகளின் தாக்குதல்களில் உடல் சிதறி உயிரிழக்கும் படையினரின் சடலங்கள் பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவது தெரிந்ததே. (உ-3)

### முச்சந்தி முரளி



பொலித்தீன் பொதிகளிலை பொதிஞ்சிருக்கிற செய்தி ஆட்சியாளருக்கு எங்கை உறைக்கப்போகுது .....?

## வவுனியாவில் புலிகள் தாக்கு; இரு படையினர் உயிரிழப்பு

### மேலும் நால்வர் படுகாயம்

கொழும்பு, ஜன. 4

வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரு படையினர் உயிரிழந்தனர் என்றும், மற்றும் நான்கு படையினர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் நடத்திய முதல் தாக்குதல் இதுவாகும் என்று ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் நுழைய முயன்ற படையினர் மீதே போராளிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## கிளாலிக் கடலில் சூடு! பயணிகள் 9 பேர் பலி?

### 'வெரித்தாஸ்' வானொலி தகவல்

கொழும்பு, ஜன. 4

கிளாலிக் கடலில் பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பூநகரி, நல்லூர்ப் பகுதி கரையிலிருந்து வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகளை மேற்கோள் காட்டி ''ரோய்ட்டர்'' செய்தி ஸ்தாபனம் இத்தகவலை வெளியிட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

உயிரிழந்த ஒன்பது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் —

பொதுமக்கள் பயணம் செய்த 16 படகுகளில் 6 படகுகள் மட்டுமே மறு கரையைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 4

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு 7 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பெரும் சத்தத்துடன் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. சேத விவரம் ஏதும் தெரியவரவில்லை.

(ஒ-15)

## பொலீஸ் நிலையத்தை முஸ்லிம்கள் முற்றுகை!

### ஏறாவூரில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன. 4

நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் நேற்று ஏறாவூர் பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இரு முஸ்லிம் ஊர்காவலர்கள் ஏறாவூர் பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்கானதை ஆட்சேபித்தே இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

பொலீஸார் முஸ்லிம் பெண்களைக் கிண்டல் செய்ததைத் தொடர்ந்து ஊர்காவலர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல் இடம்பெற்றது என்றும் —

இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்தனர் என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்ட பொதுமக்களை கலைக்க பொலீஸார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் அடையாள பகிஷ்கரிப்பு?

யாழ்ப்பாணம், ஜன. 4

சம்பள உயர்வு கோரி தென் பகுதிப் பல்கலைக்கழகங்களில் நடந்து வரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழகத்திலும் அடையாள பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை நடத்த முன் முயற்சிகள் நடந்து வருவதாக அறியப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் விசேட அவசர கூட்டத்தில் கலந்து கொள்ளும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராயவுள்ளனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் உள்ள பிரச்சனைகளை விட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ள போதும், சகல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு எமது ஆதரவை தெரிவிக்க வேண்டியது எமது கடமை—என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அராலி கண்ணிவெடிச் சம்பவம்:

## கொமன்வெல்த் ஆணைக்குழு விசாரணை நடத்தும்!

கொழும்பு, ஜன. 4

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 9 படை அதிகாரிகள் அராலி கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணையை கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழு நடத்தும் என்று அறிவிக்கப்படுகின்றது.

தமது கணவரின் மரணம் குறித்து சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்றைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்று திருமதி லாலி கொப்பேகடுவ அரசைக் கேட்டிருந்தது தெரிந்ததே.

திருமதி கொப்பேகடுவ தமது கணவரின் மரணம் தொடர்பாக தாம் விரும்பும் ஏந்தவொரு விசாரணைக் குழுவை நியமிக்கவும் அரசாங்கம் தயாராக இருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-எ)

### வவுனியா—தாண்டிக்குளம் ஊடாக

## நகைகள் அணிந்து வர பயணிகளுக்கு அனுமதி

வவுனியா - தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாகச் செல்லும் பயணிகள் வழமையாக அணியும் நகைகளை அணிந்து செல்ல படையினர் அனுமதி வழங்கியுள்ளனராம்.

ஒரு பயணி சாதாரணமாக அணிந்து செல்லக்கூடிய தங்க நகைகளை அணிந்து செல்லலாம் என்றும் —

ஆனால் தங்கக் கட்டிகள் போன்றவற்றை எடுத்துச் செல்ல முடியாது என்றும் — வவுனியா மாவட்ட இணைப்பு அதிகாரி கூறினார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடந்த சில மாதங்களாக படையினர் பயணிகள் நகை அணிந்து செல்லும்போது பெரும் கெடுபிடிகளைப் புரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

(ஒ-எ-த)

## ஜி.சீ.ஈ. விடைத்தாள்களுடன் நாளை 'குமண' புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 4

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமண' கப்பல் நாளை செவ்வாய்க்கிழமை— முன் கூட்டியே கொழும்பு நோக்கிப் புறப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக கட[illegible] தொழிலாளர்கள் கப்பலில் இருந்து பொருள்களை சுறுசுறுப்பாக இறக்கி முடித்து விட்டனர் என்று கூறப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி முடிவடைந்த ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை விடைத்தாள்களும், தபால் பொதிகளும் கப்பலில் [illegible] எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன. (ஒ-3)

## சகல மத குருமார்களும் ஜாஎலயில் பிரார்த்தனை!

### அரசியல்வாதிகள் மீது கண்டனம்

கொழும்பு, ஜன. 4

இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்று கோரி ஜாஎல பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பௌத்த 'கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் இந்து மத மக்களும் மதகுருமார்களும் கலந்து கொண்ட பிரார்த்தனை நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

அங்கு பேசிய மூத்தபௌத்த மதகுரு வண. சோபித தேரர், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசியல்வாதிகள் முயற்சி எடுப்பதில்லை என்று குறை கூறினார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்துத் தாங்கள் குறைவாகப் பேசுவதால் தேர்தல் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும் என்று அரசியல்வாதிகள் எண்ணுவதாகவும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி பிரேமதாசா பதவியேற்ற நான்காம் ஆண்டு பூர்த்தி வைபவம் கண்டி தலதா மாளிகையில் நடந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலுநர் ஆசிரியரில் ஒரு பகுதியினர்

# தொலைக்கல்வி பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஜன 4

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் கல்வி பயிலும் பயிலுநர் ஆசிரியர்களில் ஒரு பகுதியினருக்கு பயிற்சி நெறிக்கான பகுதி ' பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பயிலுநர் ஆசிரியர்கள கடந்த ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் 45 ஒப்படைகளைப் பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் சில சிரேஷ்ட போதனாசிரியர்கள் ஒப்படைகளை ஏற்றுக் கொள்வதை டிசம்பர் 11ஆம் திகதியுடன் நிறுத்தி விட்டு பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்திற்கும், இலங்கை தேசிய கல்வி நிறுவகத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த-11)

## குளத்தில் மூழ்கி இளைஞர் பலி

நவாலி, ஜன. 4

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயப் பகுதியிலுள்ள குளத்திற் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், இடம்பெயர்ந்து மானிப்பாய் சச்சி முகாமில் தங்கியிருந்த சிவலிங்கம் ஜெகநாதன் (17வயது) என்பவரே பலியானவர் ஆவார்.

பல மணி நேர தேடுதலின் பின்னர் குளத்தின் அடியில் பிரஸ்தாப இளைஞர் சிக்குண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது (ஓ-100)

## யாழ்ரன் கல்லூரி இயங்கும்

யாழ்ப்பாணம், ஜன. 4

காரைநகர் யாழ்ரன் கல்லூரி இன்று முதல் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயில் கல்யாண மண்டபத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இன்றைய உதைபந்தாட்டம்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:

★ ஊரெழு றோயல் ''பி'' எதிர் நாவாந்துறை சென் மேரிஸ்.

★ ஊரெழு றோயல் ''ஏ'' எதிர் மயிலங்காடு ஞானகலா ''ஏ''. (உ)

## நாடு வளர்ச்சி அடையாவிட்டால்

# இன்னும் 15 ஆண்டுகளில் இன்னொரு ரத்த ஆறு ஓடும்

## றொனி டி மெல் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 4

துரிதகதியில் நாடு வளர்ச்சி அடையாவிட்டால் இன்னும் பதினைந்து ஆண்டுகளில் நாட்டில் இன்னொரு இரத்த ஆறு ஓடும்.

'சண்டே ஒப்சேர்வர் வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் முன்கண்டவாறு கூறினார்.

'றுகுண மண்ணில் பிறந்த மீனவர் ஒருவர் அல்லது விவசாயி ஒருவரின் மகன் ..ந்த நாட்டின் ஜனாதிபதியாக வரும் நாளே எனது மகிழ்ச்சி நிறைந்த நாளாக இருக்கும்'— என்றும் அவர் கூறினார்.

தேசிய அந்தஸ்து கொண்ட இரு தலைவர்களே இந்த நாட்டில் இன்று உள்ளனர் அவர்களில் ஒருவர் ஜனாதிபதி பிரேமதாஸா மற்றவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சிறிமா பண்டாரநாயக்கா சுகயீனம் அடைந்துள்ளார் என்றும் அவர் கூறினார். (த-எ)


**FACULTY OF BRIGHT STUDIES**

17/4, றெயில்வே வியூ ஓவ் (off) சோமசுந்தரம் அவனியூ, கண்டிக்குளி

**ஆண்டு 5 முதல் G.C.E. (ஏ/எல்) வரை**

**LECTURERS**

தமிழ்
திரு. மகேஸ்

விஞ்ஞானம்
Phy.
திரு. தெய்வேந்திரா
Che.
திரு. சக்திதாசன்
திரு. கணேசநாதன்
Bio
திரு. மைக்கல்

கணிதம்
திரு. தெய்வேந்திரா
திரு. கணேசநாதன்

வர்த்தகம்
திரு. ராஜலோகநாதன்

சமூகக்கல்வி
திரு. நடராஜா

**English Lecturers**
Mr. J. G Rajendran (Former Teacher Royal College)
Mr P Jeganathan Rt.Govt. Senior officer)
Mr. V N. Kanthasamy (A.I.B.Lond. Inter Lond.)

**G. C. E. (A/L) Lecturers**
Phy./ pp / Pure.
திரு. தெய்வேந்திரா
திரு சக்திதாசன்

**93 மீட்டல்**
ஆரம்ப கூறுகள்
காவிகள, உராய்வு, ஈர்ப்புமை ம நுண்கணிதம், திரிகோணகணிதம், சிக்கல் எண்கள், வெப்பவியல்.

**94 A/L புதிய பிரிவு**
Phy./ App./ Pure.
ஆரம்ப கூறுகள் அளத்தல், அடிப்படை பிரயோக கணித , பொறியியல், அடசரகணிதம்.

நேர அட்டவணை நிறுவனத்தில்.

ஆரம்பம்:
05 — 01 — 1993
மாலை 4 30

ஆண்டு 5 புலமைப்பரிசில் 93
மீட்டல் ஆரம்பம்:
10 — 01 — 1993
காலை 8 மணி

A/L 93 பௌதிகம்
PAPER CLASSES
by தெய்வேந்திரா
ஆரம்பம்: 10-01-19..
காலை 10 மணி

- நிர்வாகி.

(23905)


யாழ் மாவட்ட

# கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

வண்ணார்பண்ணை, டிச. 4

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில், கூட்டுறவு தராதரப் பத்திர சாதாரண பிரிவிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சுமார் 40 மாணவர்களே இப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 4 திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பயிற்சி பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் [த-.62]

# என்னை ஏளனம் செய்வது முட்டாள்தனமான செயல்!

## தொண்டமான் சொல்கிறார்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் வந்த ''கிட்'' ( hit) எம். பி தானே என்று என்னை ஏளனம் செய்வது முட்டாள்தனமானது.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''கிட்'' எம். பி என்ற குற்றச்சாட்டை நிராகரித்த திரு தொண்டமான் மேலும் சொன்னதாவது;

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சொந்தமான தளமும் பலமும் கொண்ட ஓர் அமைப்பாகும். நான் எப்போதும் சுதந்திரமாகவே செயல்பட்டு வந்துள்ளேன். அமைச்சரவை உறுப்பினராக இருப்பினும் நாட்டின் நலன் கருதியே செயல்பட்டு வந்துள்ளேன். அரசுடனான உறவு நல்ல அத்திவாரத்தில் எழுப்பப்பட்ட தொன்றாகும்.

ஆகவே அரசுடன் சேர்ந்து பணிபுரிவதற்கு பிரச்சினை ஏதும் இல்லை என்பதை அரசியல் விமர்சகர்கள் தெரிந்து கொள்ளட்டும் — இவ்வாறு அவர் கூறினார். (த எ)

# உலக மக்களுக்குத் தேவை அன்பும் சமாதானமுமே

## ஒளி விழாவில் யாழ் ஆயர் உரை

யாழ்ப்பாணம், ஜன 4

''பகைமைஉணர்வுகள் குரோதம் என்பன நிறைந்த இருளின் மத்தியில் துயருற்று வாழும் உலக மக்களுக்கு இன்று தேவைப்படுவது அன்பும், சமாதானமுமே. கிறிஸ்துவின் பிறப்பு இருண்ட உலகிற்கு ஒரு ஒளியாகும் அவரின் போதனைகளைப் பின்பற்றி உலகில் சமாதானம் நிலவ இந்நாளில் அனைத்து மக்களும பிரார்த்திப்போம் ''

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின கிறிஸ்மஸ் ஒளி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் ஒளியை ஏற்றி வைத்து உரையாற்றிய யாழ் ஆயர் அருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் இவ்வாறு கூறினார்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் பேராசிரியர் வி. கணேசலிங்கம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் கூறியதாவது;

''அல்லலுறும் மக்களுக்கு ஆறுதல் அளிக்க கிறிஸ்து பிறந்தார். செஞ்சிலுவைச் சங்கமும் போரின் தாக்கங்களாலும். பொருளாதார இடர்களாலும் அல்லலுறும் மக்களுக்கு முடிந்த அளவு ஆறுதல் அளித்து வருகின்றது எமது எல்லைக்குட்பட்ட பதினான்கு கிளைச் சங்கங்களினூடாக மக்களின் நலனுக்காக பல செயற்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்'' என்று கூறினார்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் டாக்டர் ஆ. சிங்கராயர் பேசும்போது கூறியதாவது;

''எமக்காகத் துன்பங்களை ஏற்றுக் கொண்ட யேசுக் கிறிஸ்துவின் பிறப்பு உலகை மேன்மைப்படுத்தும் ஒரு நிகழ்வாகும். அவரின் வழியில் உலகம் உயர்வு காணவேண்டும்'' என்றார்.

கிறிஸ்துவின் பிறப்பையும், மகிமைகளையும் எடுத்துக் காட்டும் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் ஒளி விழாவில் இடம் பெற்றன. (ஓ-112)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம், ஜன 4

ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற சென் ஜோன் பொஸ்கோ மாணவன் செல்வன் காந்தகுமார் பிருந்தாபனை கௌரவிக்கும் முகமாக ''மல்லிகைப் பந்த''லின் ஆதரவில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள பாராட்டு வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மல்லிகை அலுவலகத்தில் நடைபெறும். (த)

## சொர்க்கவாசல்

யாழ்ப்பாணம், ஜன. 4

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் இரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். வைகுண்ட ஏகாதசியை ஒட்டி அதிகாலை 2.30 மணிக்கு அஷ்ட சங்காபிஷேகமும் காலை 5 மணிக்கு சொர்க்க வாசல் தரிசனமும் இடம் பெறும். (த-15)

## வல்லைப் பாலம் திருத்தம்

வல்வெட்டித்துறை, ஜன. 4

ஸ்ரீலங்காப் படையினரின் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வல்லைப் பாலம் தற்காலிக பாவனைக்காகத் திருத்தப்பட்டு வருகிறது.

பனங்குற்றிகள், இரும்பு ''கேடர்''கள் போன்றவற்றைக் கொண்டு கடந்த இரு நாட்களாக பாலம் திருத்தப் படுகிறது (ஓ-155)

## வெற்றிலைக்கு கிராக்கி

குடாநாட்டில் வெற்றிலையின் விலை திடீரென விஷம் போல் ஏறிவிட்டது. கொழும்பில் இருந்து வெற்றிலை இங்கு வந்து சேராததே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

நெல்லியடி, வல்வெட்டித்துறைச் சந்தையில் நேற்று வெற்றிலை ஒன்று ஐந்து ரூபா வரை விலை போனதாகத் தெரிவிக்கப்பட்டது (ஓ-155)

## திருத்தி வாசிக்குக

இம்மாதம் இரண்டாம் திகதி உதயன் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமான— சாவகச்சேரி ''ரைனி பொட்ஸ் கோணர்'' பாலர் கல்விக்கூட விளம்பரத்தில்— ENGLISH ELOCUTION வகுப்புகள் தொடங்குவது குறித்த தகவலில் - ''12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு'' என்பதற்குப் பதிலாக 1 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு என்று தவறுதலாக அச்சாகிவிட்டது திருத்தி வாசிக்கவும்


**யாழ். வட்ட லியோ கழகம்**

நடத்திய

அபிமான உதைபந்தாட்ட வீரர்

தெரிவுப் போட்டி - 1992

**இறுதி முடிவுகள்**

ரசிகர்களின் அபிமான உதைபந்தாட்ட வீரர்

● றோய் (பெரிய) [சென். அன்ரனீஸ் வி. க] **4111**

இரண்டாம் இடம்

● பவுண் [சென். மேரீஸ் வி. க] **3735**

மூன்றாம் இடம்

● கொலின்ஸ் [பாடும் மீன் வி. க] **3637**

அடுத்த முன்னணியில் உள்ள ஐவர்

| | | | |
|---|---|---|---|
| ★ | தர்மகுலநாதன் (வெள்ளை) | [சென்றேக்ஸ்] | 3609 |
| ★ | பஞ்சன் | [சென் மேரீஸ் வி. க] | 2555 |
| ★ | எட்மன் | [சென். அன்ரனீஸ் வி. க] | 2372 |
| ★ | கிதன் | [பாடும் மீன் வி. க] | 2275 |
| ★ | சிங்காரம் | [கலைவாணி வி. க] | 2016 |

இவர்களுக்கான பரிசில்கள் எம்மால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்ட பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். சரியான விடை எழுதிய மூன்று ரசிகர்கள் அன்றைய தினம் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டிக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

யாழ். வட்ட லியோ கழகம்

(23911)



**எடிசன் அக்கடமி**

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

411/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு 9, 10, O/L வரை**

புதிய பிரிவுகள்

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| பாஸ்கரன் | இரா. செல்வவடிவேல் |
| M. சிறிதரன் | J. J. கொலின்ஸ் |

ஆரம்பம்; 05 - 01 - 1993

பி. ப. 3-00 மணி (23900)



**விஞ்ஞான கல்வி நிலையம்**

நல்லூர்.

**புதிய பிரிவு II**

ஆண்டு 9, 10, 11

ஆரம்பம்:

05 — 01 — 1993

மாலை 3-00 மணி

(சி-2897)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### பொன்னுத்துரை முத்தாபரணம்

தோற்றம்: 20 — 01 — 1945 மறைவு: 04 — 01 — 1988

நீங்களும் வாழ்வாங்கு வாழ்ந்து, எங்கள் எல்லோரையும் அன்புடனும், பாசத்துடனும் வளர்த்து சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தாய்த் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

உரும்பராய், கிழக்கு,
உரும்பராய்.

(சி-4090)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள

# முகாம் சுற்றாடல்களில் பயிர் செய்ய நடவடிக்கை

## இணையம் மேற்கொண்டுள்ளது

வண்ணார்பண்ணை, ஜன. 4

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களின் சுற்றாடல்களில் அவர்களே மரக்கறி வகைகள் மற்றும் பழ மரங்களை பயிர் செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச சார்பற்ற நிறுனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

இதேவேளை—

போசாக்கு நிறைந்த உப உணவு வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிற்பதற்கான செயல்திட்டங்களை மேற்படி நிறுவனங்கள் தயாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுதோறும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இத் திட்டத்திற்கான உள்ளீடுகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டு கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். (த-162)


## அங்லோ ஏசியன் பேர்டிலைசேர்ஸ் கம்பனி வழங்கும் ...

## 'நியூட்றா பொஸ் சுப்பர் கே' NUTRA PHOS SUPER K

1) நெற்பயிர்களில், விளைவை 30 வீதம் வரை அதிகரிக்க குடலைபருவத்திலும், பூக்கும் பருவத்திலும், பால் பருவம் ஆரம்பிக்கும்போதும் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

2) கத்தரி, கோவா, உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களில் விளைவை பன்மடங்கு அதிகரிக்க, பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 14 நாட்கள் இடைவெளியில் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/2869)


## சித்த மருத்துவ மாணவர் மன்ற மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் ''சித்த மருத்துவம் 1990 — 1991'' மலர் வெளியீடு எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கைதடி சித்தமருத்துவ அரங்கில் நடைபெறும்.

சித்தமருத்துவத் துறைத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். பவானி நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார். கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மலரை வெளியிட்டு வைப்பார். (த)

# பொஸ்னியாவில் நெருக்கடி; மூன்று குழுக்கள் பேச்சு

பொஸ்னியாவில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மூன்று குழுக்களுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை ஜெனிவாவில் நேருக்கு நேர் பேச்சு வார்த்தைகள் நடைபெற இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

எட்டு மாதங்களுக்கு முன்னர் பொஸ்னியாவில் யுத்தம் மூண்டதன் பின்னர் நடைபெறும் முதலாவது பேச்சு வார்த்தை இதுவாகும்.

பொஸ்னியாவின் ஜனாதிபதி அலியார் இஷத் பெக்கெவிற்ச் இக்கூட்டத்தில் பொஸ்னியாவுக்கான புதிய அரசியல் யாப்புப்பற்றி விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-க)

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

# லலித் - காமினியின் கட்சி தனித்துப் போட்டியிடும்!

கொழும்பு, ஜன. 4

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடலாம் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுரா - சிறிமா கோஷ்டியினர் முன்வைக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

1994 டிசம்பரில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்ததைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் தந்திரோபாயங்கள் தவிடுபொடியாகிவிட்டன என்று அக் கட்சியின் சிரேஷ்ட எம். பி. ஒருவர் தெரிவித்தார். (த-எ)


யாழ். லயன்ஸ் கழக ஆதரவுடன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும்

பாடசாலைகளுக்கிடையேயான

## சதுரங்க (CHESS) சுற்றுப்போட்டி

1993 முதலாம் தவணை ஆரம்ப காலத்தில் மேற்படி போட்டியை நடத்துவதற்காக 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட பாடசாலை அணிகளிடமிருந்து 15 - 01 - 1993 இற்கு முன்னர் விண்ணப்பங்களைக் கோருகின்றோம் பங்கு பற்ற விரும்பும் பாடசாலை அணிகள் தங்களின் பாடசாலை அதிபரூடாக விண்ணப்பங்களை எமது கழகத்திடம் நேரடியாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: 1. இப்போட்டியானது வருடந்தோறும் முதலாம் தவணை ஆரம்ப காலத்தில் நடைபெறும்.

2. மேலதிக விவரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- அதிபர்.

(சி-4091)



## மகளிருக்கான டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சி நெறி

★ கேக் ஐசிங்

★ சமையற் கலை
(சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள், உள்ளூர் மூலப் பொருள்களில் உணவுகள் தயாரித்தல்)

★ கூந்தல் அலங்காரம்
(கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம் செய்தல்)

★ கைப்பணிகள்:
(மக்றம், கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மை செய்தல் வைக்கோல் வேலை, வாழை நார் வேலை, கழிவு துணிகளில் அலங்காரங்கள் செய்தல்)

★ பூவேலை:
(கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்கள், மலர்ச்செண்டுகள் செய்தல்.

★ தையற் கலை:
(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான ஆடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்)

- பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
- பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 10 - 01 - 1993
காலை 9-00 மணி

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 11 - 01 - 1993
காலை 9-00 மணி

★ கலாலயா ★

விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்ப்பாணம்.



## S. L. A. S.

[இலங்கை நிருவாக சேவை]

விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கும், அரச ஊழியர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

1993 ஜனவரியில் நடைபெறவிருக்கும்

## போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 06 - 01 - 1993
பிற்பகல் 2 மணி

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு/பொதுவினாத்தாள்

★ விரிவுரைகள் — புதன், வியாழன், சனி.- ஞாயிறு (2 p.m. — 5 p.m )
★ பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை.
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 350/- (முழுப் பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-2893)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாக்கு சீவும் கிறைன்டர் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: க. தவகுலரத்தினம், பாபு வீதி, வழக்கம்பரை, தொல்புரம் கிழக்கு (23906)

## சங்கீதம் வினா-விடை

ஆண்டு 10, 11இல் சங்கீதம் கற்போருக்கும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும் பயன்தரும் சங்கீதம் வினா-விடை விற்பனையாகின்றது. ஆக்கம்: செல்வி அநேகா, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23903)

## சங்கீதம்

வட இலங்கைச் சங்கீத சபையின் இரண்டாந்தரப் பரீட்சைக்கான பாடத்திட்டத்திற்கு அமைய ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த 'சங்கீதம் வினா-விடை' சகல வகுப்பு மாணவர்க்கும் பயன் தரும். அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (23893)

## வெளிவந்துவிட்டது

புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குப் பயன் தரும் தமிழ் ஆண்டு-5 செயல்நூல் வெளிவந்துவிட்டது. விரிவான விளக்கங்கள் மாதிரி வினாத்தாள்கள் கொண்டது. ஆக்கம்: த. துரைசிங்கம், ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23904)

## மயூரதி வெளியீடு

கணிதம் ஆண்டு-8 வெளிவந்துவிட்டது. ஆண்டு-9, ஆண்டு-10, O L கடந்த கால வினா-விடை விற்பனையாகின்றன. பூபாலசிங்கம், டக்மிலன், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந்தா, ஸ்ரீகாந், மது, தனலக்சுமி ஆகிய இடங்களில் கிடைக்கும். (5473)

## தேவை

இலுப்பெண்ணெய், இலுப்பை அரப்புத் தேவை மாதிரியுடன் தொடர்பு கொள்ளவும் மில்க்வைற் (சி-4087)

மெதடிஸ்த திருச்சபை பரிலூக்கா வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி உடனடியாகத் தேவை. M. B. B. S., K M P. தரத்திலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. The Manager St. Lukes Hospital, Puttur (5692)

## மணமகள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவிட அனுமதி பெற்று வசிக்கும் யாழ்ப்பாணத்து இந்து சமய வாலிபர், நட்சத்திரம்: மிருகசீரிடம், 14 05 64இல் பிறந்தவருக்கு மணமகள் தேவை. ஜாதகம், படம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்க. பொருத்தம் அமையின் திருமணம் பிறந்தகத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இல. 871, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5684)

## O L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [23887]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 06 — 10 — 1969

உதிர்வு: 17 — 12 — 1991

செல்வி
## ஜெயந்தி துரைராஜசிங்கம்

கண்ணின் கருமணிபோல் காத்து வளர்த்தோமே
பெண்ணின் திலகமதாய் பெருமையுடன் திகழ்ந்தாயே
மண்ணில் மாமலராய் மணம்வீசி மறைந்தாயோ
எண்ணில் துயரந்தான் ஜெயந்தி நீ எங்கு சென்றாய்?
அந்நாளில் காமாக்ஷி அம்பிகையை வழிபட்டு
முன்னாளில் முழுநிலவாய் ஒளிவீசி நின்றாயே!
இந்நாளில் கண்மணியே இதயத்திலுனை இருத்தி
எந்நாளும் ஜெயந்தியே உனை எண்ணித்
தவிக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரர்கள்,
மாமன்மார், சித்தப்பாமார் மற்றும்
உறவினர்கள்.

16/3, சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம். (23888)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சரஸ்வதி சரவணமுத்து

(சச்சி - வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

தோற்றம்: 31—01—1933

மறைவு: 04—12—1992

அன்பு கொண்ட அன்னையாய்
அறிவு தந்த தெய்வமாய்
பண்பு நிறை மனைவியாய்
பரிணமித்த செல்வமே
பரிதவிக்க விட்டெமை
பறந்து எங்கே போனீரோ
மறக்க முடியவில்லையே
மறைந்து போன செய்தியும்
உமை பிரிந்த நாள் முதல்
உறங்கவில்லை கண்களும்
கரங்குவித்தோம் மெய்யுருக - உங்கள்
ஆத்மா சாந்தி அடையவே!

கணவன், மகன், குடும்பத்தார்

200, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (23887)

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்:- சித்தன்கேணி கணேச வித்தியாசாலை

காலம்:- 04 — 01 — 1993 (திங்கள்)

நேரம்:- மாலை 3-00 மணி

நிகழ்வு:-
1. ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
2. புதுவருட நிர்வாகக்குழு தெரிவு

அனைத்து நிறுவன நிர்வாகிகளையும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- செயலாளர்.

(5699)

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

"ராக பாவம்"

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:- 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச் சீட்டு:-
நாள் ஒன்றுக்கு: 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

(சி-3920)

சுவாமி விவேகானந்தர்
சிக்காகோ உரையின்

# நூற்றாண்டு விழா (1893 – 1993)

# கட்டுரைப் போட்டி

1. பல்கலைக்கழக மாணவர் / கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கட்டுரைப் போட்டி.

(1992ஆம் ஆண்டு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறியவர்களும் பங்குபற்றலாம்.)

விடயம்:
1. சுவாமி விவேகானந்தர் ஒரு தீர்க்கதரிசியா?

அல்லது

2. சுவாமி விவேகானந்தர் ஒரு நவீன சந்நியாசியா?

ஆய்வுக் கட்டுரையை துறைத்தலைவர், கலாசாலை அதிபர்களின் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும்.

முதற் பரிசு - ரூபா 2,000 - 00
இரண்டாம் பரிசு - ரூபா 1,000 - 00
மூன்றாம் பரிசு - ரூபா 500 - 00

குறிப்பு: முதல் இரண்டு பரிசுகளில் சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் (16 புத்தகங்கள்) அடங்கும். மிகுதி காசோலையாக வழங்கப்படும்.

2. கல்விப் பொதுத்தராதர சாதாரண / உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மட்டும்.

விடயம்:
1. சிக்காகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர்.

அல்லது

2. சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜயம்

கட்டுரையைக் கல்லூரி அதிபர்களின் அத்தாட்சியுடன் அனுப்பவேண்டும்.

1ஆவது பரிசு-ரூபா 500 பெறுமதியான நூல்கள்
2ஆவது பரிசு-ரூபா 250 பெறுமதியான நூல்கள்
3ஆவது பரிசு-ரூபா 125 பெறுமதியான நூல்கள்

## முடிவு திகதி: 31 - 03 - 1993

கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஸ்ரீசாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி-4088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பேச்சும் செயலும்

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதன் மூலமே நாடு துண்டாடப்படுவதை - பிளவுண்டு போவதைத் தடுக்க முடியும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு முன் வைக்கப்பட்டால் அது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காண்பதே தற்போது அவசரத் தேவையாகும்.

நேற்று முன்தினம் கண்டி எண்கோண மண்டபத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாசா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாசா பேச்சில் வல்லவர். எனவே அவரது இந்தப் பேச்சுக்களைப் படிக்கும் எவரும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர் அக்கறையாக உள்ளார். இதயசுத்தியுடனேயே இதனைச் சொல்கிறார். ஆகையால் இராணுவத் தீர்வு வழியைக் கைவிட்டு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அவர் மனங்கொண்டுள்ளார்— என்று நினைக்கத் தோன்றும்.

ஜனாதிபதி பதவிக்கு வந்ததில் இருந்து, இனப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதில் அதிக அக்கறை உள்ளவர் போல திரு. பிரேமதாசாபேசி வருகிறார். ஆனால் நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற பெரும்பயணத்தில் ஓர் அடி தானும் அவர் முன்னுக்கு எடுத்து வைக்கவில்லை. பேச்சு ஒன்றும் செயல் வேறுமாக நடந்து வருகிறார்.

இந்நாட்டில் இரத்தக் களரிக்கும் மற்றும் எல்லாவித அழிவுகளுக்கும் காரணமாக இருந்து வருவது இனப்பிரச்சினை. இந்த நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று உண்மையாகவே விரும்பியிருந்தால் தாம் பதவியேற்ற ஆரம்பத்திலிருந்தே அதனை நோக்கிச் செயற்பட்டிருக்கலாம், உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் நிலைப்பாட்டைக் கைவிட்டு. இரண்டும் ஒன்றாகவே செயற்பட்டிருந்தால், பிரச்சினை இந்தளவுக்கு முற்றிப்போவதைத் தவிர்த்துத் தீர்த்து வைத்திருக்கலாம்.

வெறும் பேச்சளவில் இன்றி உண்மையாகவே நாடு பிளவுண்டு போகும் நிலை வந்துவிட்டதை உணர்ந்து இப்போது கழுத்தளவு தண்ணீரில் நின்று ஓலம் வைக்கிறார்!

கருத்திணக்கம் மூலம் தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு இராணுவத் தீர்வினால் தமிழர்களைப் பலவீனமாக்கும் முழு எண்ணத்துடனும் கடந்த நான்கு வருடங்களாகச் செயற்பட்டார். அதனால் இராணுவம் இப்போது அரசாங்கத்துக்குச் சமாந்தரமான ஓர் நிறுவனமாக மாறிவிட்டது. இந்தக் கட்டத்தில் இராணுவத் தீர்வு வழியை மாற்றிச் சமாதான வழியில் கால்பதிக்கும் தைரியம் பிரேமதாசாவுக்கு உண்டா என்பது சந்தேகத்துக்குரியது. இது அவரே வகுத்த வினை.

ஆகையால், இனப்பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்ப்பதற்கு இப்போது அவர் விரும்பினாலும் கூட, இராணுவமும், சிங்களப் பேரினவாதமும், இனப்பிரச்சினை மூலம் அரசியல் லாபம் தேடும் அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பார்களா என்பது பென்னம் பெரிய கேள்வி. அவர்களைத் தமது பக்கம் கொண்டுவரக் கூடிய சக்தியும் வல்லமையும் பிரேமதாசாவுக்கு உண்டா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

---

குடாநாட்டின் மீது இறுதித் தாக்குதலை ஆரம்பித்தால்

# திறந்திருக்கும் சமாதானக் கதவுகளை புலிகள் இழுத்துமூடும் நிலை உருவாகும்

நேற்று முன்தினம் இரவு வெரித்தாஸ் வனொலியின் 'உண்மையின் எண்ணங்கள்' நிகழ்ச்சியில் இலங்கை பற்றி வெளியான செய்திக் கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

"நாம் வன்முறையில் மோகங்கொண்ட போர் வெறியர்கள் அல்லர்; நாம் உண்மையில் ஆன்மீக ரீதியான, நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகின்றோம். அதனால்தான் இந்தக் கொடூரமானபோரின் மத்தியிலும் சமாதானத்தின் கதவை நாம் திறந்தே வைத்துள்ளோம். ஏனெனில் சமாதானத்தை அடைவதற்கே நாம் போராடுகிறோம். என்றோ ஒரு நாள் எதிரி எமது சமாதானக் கதவைத் தட்டுவானேயானால் நாம் எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராகவே இருக்கிறோம். ஆனால் சிங்களப்படைகள் எங்களை அழித்துவிடவும் ஒழித்துக் கட்டவும் முற்படுகையில் நாம் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை" —

— இப்படிக் கூறியுள்ளவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன்.

திரு. பிரபாகரனின் இந்த சமாதான அறைகூவலை தள்ளிவிடாமல் அரசு அதை முக்கியமான ஒன்றெனக் கருத வேண்டும். பிரபாகரனின் பேச்சிலுள்ள உண்மை எண்ணத்தை நாம் அங்கீகாரம் செய்து சமாதானத்திற்கான நடவடிக்கையை மேற்கொள்வோம் என கொழும்பு ஆயர் பிதா மார்கஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

### தெரிவுக்குழு தோல்வி

1992இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி பிரேமதாசா கூறி வந்தார். ஆனால் 1993ஆம் ஆண்டு வந்து விட்டது. ஆனால் சமாதானத்திற்கான வாய்ப்புகள் உண்டாகவில்லை. தெரிவுக்குழுவின் 16 மாதகால முயற்சி தோல்வி கண்டுள்ளது குறைந்தபட்சம் அரசை தொடர்ந்து ஆதரிக்கும் தமிழ்க் குழுக்களைக் கூடத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வை தெரிவுக்குழுவால் சிபார்சு செய்ய முடியவில்லை. எனவே அக்குழுவால் புலிகளைத் திருப்திப்படுத்த முடியாது போனது வியப்பில்லை.

### அரசியல் உறுதி வரவில்லை

அனைத்துத் தரப்பும் ஏற்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வைத் தருவதற்கு இலங்கை அரசியல் கட்சிகளுக்கு இன்னும் அரசியல் உறுதி வரவில்லை.

பூனை கண்ணை மறைத்துவிட்டால் உலகமே இருண்டுவிட்டது என நினைக்குமாம். அது போல இருக்கிறது சிங்கள அரசியல் கட்சிகளின் நிலை.

இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள மக்கள் தவறான எண்ணத்தைக் கொண்டிருந்தால் — அதை அப்படியே கட்டிக்காக்க சிங்கள அரசியல் வாதிகள் நினைத்தால் —

அல்லது தமிழர்களுக்கு நீதியான சலுகைகளை வழங்கினால் மக்கள் ஆதரவை இழக்க வேண்டி வரும் என ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் தொடர்ந்து கருதினால் —

அது இலங்கை நாடு தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டும் நிலையையே ஏற்படுத்தும்.

### புலிகளின்றி தீர்வா?

அரசின் எந்தத் தீர்வும் தமிழ்க் கட்சிகளை மாத்திரம் திருப்திப்படுத்தினால் போதாது. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் அத்தீர்வை ஏற்காதவரை அதனை நடைமுறைப்படுத்துவது கடினம்.

இராமர் இல்லாமல் இராமாயணமா? அது போல புலிகள் சம்பந்தப்படாமல் தீர்வா? அத்தகைய தீர்வு சமாதானத்தை தராது.

எனவே நாடாளுமன்றக்குழு தீர்வைத் தரும் என நம்புவதாலோ, அத்தகைய தீர்வைத் தமிழ்க் கட்சிகள் ஏற்கும் என எதிர்பார்ப்பதாலோ பிரச்சினை முடிந்துவிடப் போவதில்லை.

அரசு தரும் தீர்வை ஏற்று தாங்கள் போரைக் கைவிடுவதாக விடுதலைப் புலிகள் முறைப்படி அறிவிக்கும் வரை எத்தகையத் தீர்வும் நிரந்தர அமைதியைத் தரப் போவதில்லை.

இந்த நிலையை ஜனாதிபதி பிரேமதாஸாவும் நன்கு உணர்ந்திருப்பார்.

இந்த அடிப்படையில் தான் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இரகசியப் பேச்சுவார்த்தை என்ற வதந்தியையும்—

'இராணுவத் தீர்வல்ல; அரசியல் தீர்வே சிறந்தது' — என ஜனாதிபதி பிரேமதாஸா அடிக்கடி கூறிவருவதையும் நோக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளும் அரசும் வெளிப்படையான பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து கருத்து வேறுபாடுகளினால் அந்தப் பேச்சுவார்த்தை உடைந்து போவதை விட—

பேச்சுவார்த்தையை இரகசியமாக நடத்தி, கருத்து ஒற்றுமை கண்ட பின்னர், சம்பிரதாயபூர்வமாக— வெளிப்படையாக— பேச்சு நடத்தி பின்னர் பேச்சுவார்த்தை வெற்றி என அறிவிப்பது சிறந்த இராஜதந்திரமாகும்.

### இறுதித் தாக்குதல்

தற்போது இரகசியமான முறையில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்று பேசப்படுவது எமக்கு ஆறுதல் தரும் ஓர் அம்சமாகும்.

இதற்கிடையில் இந்த அரசியல் பேச்சு இரகசியமாகவே தோல்வியடைந்து விட்டால், 1993இல் இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க தனது இறுதித் தாக்குதலை நடத்தக்கூடும். 'Final Count-Down' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மாபெரும் இராணுவத் தாக்குதலில் உயிரிழக்கப் போவது அப்பாவிப் பொதுமக்கள்தான்.

ஆனால் இத் தாக்குதலைத் தடுக்கும் நோக்கிலேயே புலிகள் கொப்பேகடுவ, கிளான்ஸி பெர்னாண்டோ ஆகியோரைத் தீர்த்துக்கட்டியுள்ளதாகத் தெரிகிறது. இராணுவத்தின் இறுதித் தாக்குதலுக்கு முன்பே பல பதில் தாக்குதலை புலிகள் நடத்தியுள்ளனர்.

எனவே யாழ்ப்பாணத்தின் மீது இராணுவம் இறுதித் தாக்குதலை ஆரம்பித்தால் புலிகள் எத்தகைய பதில் தாக்குதலை நடத்துவர் என்பது அச்சத்திற்குரிய விடயமாக இருக்கும்.

### சமாதானக் கதவு மூடப்படலாம்

எனவே இத்தகைய இறுதித் தாக்குதலை இராணுவம் நடத்தும் பட்சத்தில் புலிகள் சமாதானத்திற்கான கதவுகளை நிரந்தரமாக மூடக்கூடும்.

சமாதானத் தீர்வுபற்றிக் கூறிக்கொள்ளும் அரசு சமீபகாலமாக ஆர்ஜென்ரீனா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து ஹெலிகளையும் நவீன படகுகளையும் வாங்கிக் குவிக்கிறது.

ஒரே நேரத்தில் சமாதானப் பேச்சும் ஆயுதக் குவிப்பும் என்ற அரசாங்கத்தின் போக்கைப் பார்த்தால், புலிகள் தமது தீர்வுக்கு ஒத்துவரவில்லையென்றால் தற்போது வாங்கப்படும் ஆயுதங்களைக் கொண்டு இராணுவ ரீதியான தீர்வில் அரசு இறங்கக்கூடும் எனத் தெரிகிறது.

இராணுவம் இராணுவத் தீர்வையே அடைய விரும்பும். எனவே இராணுவ உயர்மட்டத்திற்கு அரசியல் தீர்வை விட இராணுவத் தீர்விலே நம்பிக்கை ஏற்படக்கூடும்.

ஆனால் இலங்கை அரசியலில் தற்போது முக்கியத்துவம் பெற்றுவரும் பௌத்த மத குருக்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்திருப்பது ஆறுதலான விடயம். இதனால்தான் ஜனாதிபதி பிரேமதாசா பௌத்த மதக் கோவிலில் மீண்டும் சமாதான அழைப்பை விடுத்துள்ளார்.

எனவே இலங்கை அரசியலில் சமாதானம், நிரந்தர அமைதி ஆகியவற்றிற்கான வாய்ப்பு 1993இல் தட்டித் தட்டி ஆரம்பிக்கிறது போல தெரிகிறது. இந்த மலர் மலரட்டும்!

★

---

# யாழ்., மட்டு. பல்கலை மாணவர் குறித்து சிங்கள மாணவன்!

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு (கிழக்கிலங்கை) பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் நிலையை விளக்கி, சிங்கள மக்களையும், அரசாங்கத்தையும் விளித்து—

கொழும்புப் பல்கலைக் கழக மாணவன் விஜயவிக்கிரம "லங்காதிப" சிங்களப் பத்திரிகையில் எழுதிய கடிதம் இதுவாகும்.

ஆனால் தெற்கின் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்ட செய்தி வந்துள்ளது!

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களைப் பற்றிப் பலர் மறந்திருப்பர். ஒருபுறத்தில் குண்டுகளின் சத்தங்கள், மறுபுறத்தில் தங்கள் தாய், தந்தையர், வீடு வாசல், சொத்துக்கள் ஆகியனவற்றுக்கு இந்தக் கொடிய யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புகள். போதிய உணவு இல்லை இருக்க இடமில்லை. தமது உறவினர்கள், சகோதரர்கள் யுத்தத்தில் ஒரு தரப்பில் உள்ளனர். இருப்பினும் யாழ்ப்பாண, மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்கள் செயற்படுகின்றன.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் மோசமான, கல்வி அறிவு பெறுவதற்குப் பாதகமான சூழலிலே தங்கள் கல்வியை மேற்கொள்கின்றனர். நீங்கள் இதையெல்லாம் நம்புவீர்களா?

★ பல ஆண்டுகளாக மின்சாரமில்லை. ஒரு போத்தல் மண்ணெண்ணெய்யின் விலை 400/- வுக்கு மேல் குண்டுச் சத்தங்களின் மத்தியில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் படிப்பதற்கு வெளிச்சம் ஏது? பூரணை தினம் அவர்களுக்கு ஒரு முக்கியமான நாளாகும். அது போயா நாளாக இருப்பதால் அல்ல; அன்று நிலவில் பாடங்களைப் படிக்கலாம் என்பதால்.

★ எழுதுவதற்கு பேனை, மை, கடதாசி ஆகியனவற்றைப் பெற முடியாதுள்ளது. சிமெந்துப் பைக் கடதாசியில் குறிப்புகளை எடுக்கிறார்கள் சில சமயம் பாவித்த கடதாசிகளையே மீண்டும் பாவிக்கின்றனர்.

★ ஆய்வுகூட வசதிகள் மிகக் குறைவு.

★ கொழும்புக்கு வந்து கல்வியை மேற்கொள்ளுவது ஜீவமரணப் போராட்டமாகும். மாணவர்கள் தமது கல்வி தொடர்பாக ஆகக் குறைந்த வசதிகளைக் கோரினால் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடப் போவதாக எச்சரிக்கை செய்கிறார்கள். அது மட்டுமா? மாணவர்கள் தடுப்புக் காவல் முகாம்களில் மாதக் கணக்காகத் தங்க வேண்டிய நிலை ஏற்படும்

யாழ் பல்கலைக்கழக மாணவருக்கு உள்ள இப்பிரச்சினைகள் தொடர்பாகவும் பொதுவாக யாழ்ப்பாணத்திலிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு செயற்பட ஆரம்பித்துள்ளது. அவர்களிடையே இரு குழுக்கள் உருவாகியுள்ளன ஒரு குழு விடுதலைப் புலிகளைப் பிரதிநிதிப்படுத்துவதாகவும் மற்ற குழு கட்சி சார்பற்ற மாணவர்களைப் பிரதிநிதித்துப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது (கட்சிசார்பற்ற மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் போட்டியிட்ட மாணவர்கள் விடுதலைப் புலிகள் அல்லர் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்)

### மட்டக்களப்பு பல்கலைக்கழகம்

★ இடவசதிகள் போதாது சிலர் தங்களது தங்குமிடமாக ஆரம்ப பாடசாலை ஒன்றையே உபயோகிக்கிறார்கள்.

★ விரிவுரையாளர் பேராசிரியர்களுக்கும் கடும் பற்றாக்குறை நிலவுகிறது

★ மாணவர்கள் தங்கள் கல்வி சம்பந்தமாக ஆகக் குறைந்த வசதிகளை கோரினால் பல்கலைக்கழகம் இழுத்து மூடப்படும் நிலை உருவாகியுள்ளது.

★ மட்டக்களப்பு பல்கலைக் கழக மாணவர்களும் மாணவர் அமைப்பை உருவாக்கியுள்ளனர். இருப்பினும் நிர்வாகிகளின் இடையூறுகள் குறைந்ததாக இல்லை மாணவர் அவையின் தலைவர் திரு. பிரபாகரன். (அவர் வேலுப்பிள்ளை பிரபாகரனல்ல என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்).

எப்படியாயினும் ஒரு குறைபாடு உள்ளது அவர்களது பிரச்சினைகள் எங்களை வந்தடையும் எல்லா வழிகளும் மூடப்பட்டு விட்டன. எங்களுக்கும் அவர்களுக்கும் இதைவிட அதிகமான தொடர்புகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுமாயின் நாட்டின் எதிர்காலத்திலும் நல்ல மாற்றங்கள் இடம் பெற வாய்ப்புண்டு.

அவர்களது குரல் எங்களுக்கும் எங்களது குரல் அவர்களுக்கும் கேட்க வழி அமைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களுக்கு கல்வி வசதிகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கும் எங்களுக்கும் இடைவெளியை உருவாக்க தகவல் தொடர்பு சாதனங்கள் முயற்சி எடுக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

★

### நாளை

யாழ்ப்பாணம், ஜன. 4

சங்கானை சண்டிலிப்பாய், உடுவில் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் நிர்வாகப் பிரிவுகளுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல்கள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செயலகங்களில் நாளை நடைபெறவிருக்கின்றன சங்கானை, உடுவில் அலுவலகங்களில் காலை 10 மணிக்கும் சண்டிலிப்பாய், தெல்லிப்பளை அலுவலகங்களில் நண்பகல் 1 மணிக்கும் கலந்துரையாடல் நடைபெறும். (உ)

சங்கானையில் அடையாள அட்டைக்கான

## விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

வலிமேற்கு, ஜன 4

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தேசிய அடையாள அட்டைகளை விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் முடிவடைந்து விட்டதனால் பொதுமக்கள் பெரிதும் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

197 , 73ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகள் மீளப்புதுப்பிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்திருப்பதைத் தொடர்ந்து விண்ணப்பப்படிவங்களுக்கு மக்கள் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது (த-175-68)

## கூட்டுறவு ஊழியருக்கு காப்புறுதி, ஓய்வூதிய திட்டம்

கொழும்பு, ஜன 4

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டம், ஓய்வூதியத் திட்டங்கள் கொண்டுவரப்பட உள்ளன.

உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு வீரசிங்கமல்லிமாராச்சி இதனைத் தெரிவித்தார்

நீர்கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு இனிமேல் ஆகக் குறைந்த சம்பளமாக ரூபா 2 ஆயிரம் வழங்கப்படும், இதற்கான ஒழுங்குகளை நான் செய்துள்ளேன். எமது சனத்தொகை ஒரு கோடியே 70 லட்சமாகும் இவர்களில் 40 ஆயிரம் பேர் மட்டுமே கூட்டுறவு துறையில் வேலை செய்கின்றனர்— என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ். வண்ணை சிவன் கோவில்
## திருவாசகப் பெருவிழா

1 ஆம் நாள் சிறப்பு நிகழ்ச்சி

காலம்: 04 - 01 - 1993 (திங்கள்)

மாலை 5-00 மணி.

### ★ விசேட மங்கள இசை ★

நாதஸ்வரம்: அளவையூர் S. S. சிதம்பரநாதன், காரையம்பதி K. K. கணேசன்

தவில்: அளவையூர் T. உதயசங்கர், இணுவை S. சுதாகர்

மாலை 7 - 00 மணி

### ★ பட்டி மண்டபம் ★

நடுவர்: திரு. இ. ஜெயராஜ்
(அகில இலங்கை கம்பன் கழகம்)

(சி/2895

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுவாம்பிள்ளை மேரிப்பிள்ளை

நவாலியைச் சேர்ந்த திருமதி சுவாம்பிள்ளை மேரிப்பிள்ளை நேற்று (03-01-93) அதிகாலை காலமானார். இவர் காலஞ்சென்ற சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும், புஸ்பம், அமுதம், காலஞ்சென்ற அருள் ஆகியோரின் அன்புத் தாயாரும். செபதேயு, மதியாபரணம் (இளைப்பாறிய கலால் இலாகா அதிகாரி), கிருஷ்ணசெட்டி பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்), அ. கி. செபநாயகம் (இளைப்பாறிய அரச அதிபர், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 03-01-93 அன்று பிற்பகல் 4-30 மணியளவில் சென். நிக்கொலஸ் ஆலயத்தில் நடைபெற்று நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

''மதிமாளிகை''
3ஆம் குறுக்கு தெரு,
நாவாந்துறை,

(?3912)

### கந்தப்பு இலட்சுமணபிள்ளை

காரைநகர் அறுகம்புலத்தைச் சேர்ந்த கந்தப்பு இலட்சுமணபிள்ளை காலமானார். இவர் பூரணத்தின் அன்புக்கணவரும், நடராசா (சுவிஸ்), மகேஸ்வரி, சரசு, இராஜேஸ்வரி (ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி), சிவஞானவல்லி ஆகியோரின் அன்புத்தகப்பனாரும். கோகநதை (சுவிஸ்), காலஞ்சென்ற லோகநாதன் (தங்கொட்டுவ வர்த்தகர்), பரமானந்தன் (வவுனியா), அரியரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும். சிவசம்பு, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 3-1-93 பி.ப, 2 மணியளவில் சித்தனை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மூளாய் றோட்,
சுளிபுரம்.

(23902)

### திருமதி இராக்கினி சுவாம்பிள்ளை

சுன்னாகத்தை வதிவிடமாகக் கொண்ட இராக்கினி சுவாம்பிள்ளை 3-1-93 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சந்தியா சுவாம்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி மேரி ஞானமலர் சில்வெஸ்டர் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி), அன்புராசா (இ. போ. ச, யாழ்ப்பாணம்), திருமதி ஸ்ரெல்லா திரேசா, சூசைதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், சில்வெஸ்டர், ராசமலர் - அன்புராசா, சூசைதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏபிரகாம் பிரேமரத்தினா, யஸ்தஸ், யுலியானா, யஸ்ரினா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி விடுதியில் இருந்து புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கி. அலோசியஸ்

செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

(23913)

# யதார்த்தமான தீர்வு தான் இனப்பிரச்சினைக்குத் தேவை

## கண்டி மேற்றிராணியார் கருத்து

கொழும்பு, ஜன. 4

இனப்பிரச்சினைக்கு யதார்த்த பூர்வமான தீர்வு காண்பது அவசியம்.

புதிய தரிசனம், புதிய கருத்தமைப்புகள் ஆகியவற்றில் இருந்து விலகிச் சென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது தாமதமாகி விடும்'

கண்டி அதிமேற்றிராணியார் வியானி பெர்னாண்டோ முன் கண்டவாறு கூறினார்.

கண்டி புதிய அந்தோனியார் ஆலயத்திற்கு ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த சனிக்கிழமை விஜயம் செய்த போது அங்கு திருப்பலிப் பூசையை அதிமேற்றிராணியார் வியானி பெர்னாண்டோவே நடத்தினார். அதன் பின்னர் நடந்த வைபவத்தில் பேசிய போது அவர் முன் கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

அதிமேற்றிராணியார் வியானி பெர்னாண்டோ மேலும் சொன்னதாவது;-

நாடு எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை இனப்பிரச்சினை தான். ஆயுதம் தாங்கிய குழுக்கள் மாத்திரம் அல்லாமல், காலத்துக்கு ஒவ்வாத குறுகிய கருத்துக்களைப் பின்பற்றுபவர்கள் கூட நாட்டின் ஒற்றுமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றார்கள். இனப்பிரச்சினைக்கு யதார்த்த பூர்வமான தீர்வு அவசியமாகின்றது. புதிய சிந்தனை புதிய கருத்து இன்றியமையாதவையாகும்.

இவற்றைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள நாம் தவறுவோமேயானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நீண்ட காலம் எடுக்கும் — என்றார்.

## பிரேமாவிடம் சவால் விட்ட
# எதிரணி எம். பி. வீட்டில் முக்கிய கோவை திருட்டு

கொழும்பு, ஜன. 4

ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிராக சவால் விட்டு வெற்றியீட்டிய எதிர்க்கட்சி எம். பியின் வீட்டிலிருந்து சில முக்கிய ஆவணங்கள் இனந்தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டிருக்கின்றன.

1992ஆம் ஆண்டு முடிவதற்குள் ஆடை தயாரிக்கும் இருநூறு ஆலைகளைத் திறக்கப்போவதாக ஜனாதிபதி பிரேமதாஸா முன்னர் அறிவித்திருந்ததும் —

ஆனால் அப்படி இருநூறு ஆலைகளை 1992 முடிவுக்குள் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்க முடியாது என கொழும்பு மாவட்ட எம். பியான பந்துல குணவர்த்தனா பகிரங்கமாக அறிவித்திருந்ததும் தெரிந்தவையே.

1992 முடிவுக்குள் இருநூறு ஆலைகளை ஜனாதிபதி பிரேமதாஸா ஆரம்பித்து வைத்தால் தான் தனது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் பந்துல குணவர்த்தனா அறிவித்திருந்தார்.

ஆனால் 1992 முடிவில் அறுபது ஆலைகளே திறக்கப்பட்டன. அவற்றிலும் இரண்டு அரைகுறை நிலையில் திறக்கப்பட்டன.

இதனால் சவாலில் பந்துல குணவர்த்தனாவே வெற்றியீட்டினார்.

இதற்கிடையில் -

திரு. பந்துல குணவர்த்தனா அரசுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்வதற்காக புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் பற்றிய விடயங்களை அப்பத்திரிகையில் அவர் கண்டித்து எழுதுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த வேளையில், அவரது வீட்டுக்குள் குளியலறையூடாகப் புகுந்த சிலர் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களை விட்டுவிட்டு முக்கிய ஆவணங்கள் பல அடங்கிய கோவை ஒன்றை மட்டும் கையாடிச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

புதிதாகத் தாம் ஆரம்பிக்கவிருக்கும் பத்திரிகைக்கு என தாம் சேகரித்து வைத்திருந்த தகவல்கள், ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் பற்றிய செய்திகள் அடங்கியிருந்த கோவையையே கையாடப்பட்டிருப்பதாக பந்துல குணவர்த்தனா பொலீஸில் புகார் செய்திருக்கிறார். (உ-6)

## நடுக் கடலில் சிக்கிய
# 4 இலங்கை மீனவர்கள் தமிழகப் பொலீஸ் காவலில்!

சென்னை, ஜன. 4

கன்னியாகுமரி மாவட்டம்-முட்டத்தூர் அருகே நடுக்கடலில் டீசல் பற்றாக்குறை காரணமாக சிக்கிக்கொண்ட நான்கு இலங்கை மீனவர்கள் கரை சேர்க்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்த டீசல் முழுவதும் தீர்ந்து போனதால் இந்த மீனவர்கள் இலங்கைக்குத் திரும்பமுடியவில்லை என்று காரணம் கூறப்பட்டது.

எனினும் பொலீஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில்
# 10 ஆயிரம் ஓட்டங்களை தாண்டினார் போர்டர்!

சிட்னி, ஜன. 4

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தலைவர் அலன் போர்டர் டெஸ்ட் ஆட்டங்களில் 10 ஆயிரம் ஓட்டங்கள் பெற்ற சாதனையை நேற்று எட்டிப் பிடித்தார். இதன் மூலம் 10 ஆயிரம் ஓட்டம் என்ற புள்ளியைத் தாண்டிய இரண்டாவது வீரர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்தது.

கிரிக்கெட் டெஸ்ட் சரித்திரத்தில் மிகக் கூடிய ஓட்டங்களை — 10 ஆயிரத்து 122 ஓட்டங்களை — எடுத்து இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் நாட்டியிருக்கும் சாதனையை அலன் போர்டர் அடுத்து வரும் வாரங்களில் முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று சிட்னியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் செஞ்சுரி அடித்ததன் மூலம் அலன் போர்ட் பெற்ற ஓட்டங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 53 ஓட்டங்களாக உயர்ந்தது. சுனில் கவாஸ்கர் 125 டெஸ்ட் போட்டிகளில் 10ஆயிரத்து 122 ஓட்டங்களைப் பெற்றார். அலன் போர்டர் 136 போட்டிகளில் 10 ஆயிரத்து 53 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகத் தற்போது நடைபெற்றுவரும் போட்டித் தொடரில் இன்னும் இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. உலக சாதனையை முறியடிக்க இன்னும் தேவைப்படும் 70 ஓட்டங்களை அலன் போர்டர் இந்த இரு ஆட்டங்களிலும் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பூநகரிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்தனர்.

இதன் பின்னர் —

இராணுவம் தனது நிலைகளை வாபஸ்பெற்று பூநகரியைத் திறக்க இணங்கினால் தாம் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்போவதில்லை என்ற செய்தியை விடுதலைப் புலிகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் தெரிவித்திருந்தனர்.

ஐ. நா. தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி இந்தச் செய்தியை கொழும்பில் உள்ள தமது அமைப்பின் பிரதிநிதிகளிடம் எடுத்துச் சென்று வழங்கினார் என்றும்—

அதனையடுத்து அதுபற்றி ஸ்ரீலங்கா அரசு தரப்பு அதிகாரிகளுடன் கொழும்பில் உள்ள ஐ நா. அகதிகள் தூதரகப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர் என்றும் அறியவந்தது.

அதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும்—

ஜெனிவா தலைமையகத்தில் தூதரகத்தின் உயர் பிரதிநிதிகள் இது விடயம் குறித்து ஆலோசித்து வருவதாகவும் அறியவந்தது

கொழும்பு சென்றுள்ள ஐ. நா. தூதரகத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி இன்னும் ஓரிரு தினங்களில் யாழ். திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## உலகச் சரித்திர முக்கியத்துவமிக்க
# அணு ஆயுத குறைப்பு உடன்படிக்கை கைச்சாத்து

மாஸ்கோ, ஜன. 4

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதங்களைக் குறைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சினும் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

உலகச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சி மாஸ்கோ, கிரெம்ளின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில் இரு நாடுகளும் தம்மிடமுள்ள அணு மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களை மூன்றில் இரண்டு பங்கினால் குறைக்கவுள்ளன.

இந்த உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டதும் ரஷ்யாவின் ஆயுதபலம் 1970களில் இருந்த நிலையையும் — அமெரிக்காவின் ஆயுதவலிமை 1960களில் இருந்த நிலையையும் அடைந்துவிடும்.

இரு இராணுவ வல்லரசுகளும் தற்சமயம் சுமார் 21 ஆயிரம் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. அடுத்த 10 ஆண்டுகளில் இரு நாடுகளும் தம்மிடம் உள்ள ஆயுதங்களை 3 ஆயிரம் முதல் 3 ஆயிரத்து 500 வரை குறைக்க இணங்கியுள்ளன. (ஒ-எ)

# திருவாசக விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 4

திருவண்ணைநகர் வைத்தீஸ்வரன் ஆலயத்தின் மூன்று நாள் திருவாசக விழா இன்று ஆரம்பமாகிறது.

ஆலய பரிபாலன சபையாரால் நடத்தப்படவிருக்கும் இந்த விழாவின் இன்றைய காலை நிகழ்ச்சிகளுக்கு சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமை வகிப்பார். தொடக்கவுரையை யாழ் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கமும், சிறப்புரையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்துவர்.

மாலை நிகழ்ச்சிகளுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு சிவசரவணபவன் தலைமை வகிப்பார் அ. இ. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் நடுவராகப் பணிபுரிய திருவாசகம் பற்றிய பட்டி மண்டபம் நடைபெறும். (அ)

# சார்க் மாநாட்டுக்கு நரசிம்மராவ்

புதுடில்லி, ஜன. 4

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இம்மாதம் 12ஆம் திகதி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு விஜயம் செய்கிறார்.

இம்மாதம் 13, 14ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சார்க் அமைப்புத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே திரு. ராவ் அங்கு செல்கிறார்.

கடந்த டிசம்பரில் டாக்காவில் நடைபெறவிருந்த இம்மாநாடு, அயோத்தி விவகாரம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-எ)

### கிளாலிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றடைந்ததாகவும் ''ரோய்ட்டர்'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் இரவு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்றும்—

பயணிகள் படகுகள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் செய்திகள் வெளியாகி இருந்தன. (ஒ-எ)

### சகல மத ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதே தினத்தில் எதிரணியைச் சேர்ந்த மதகுருமார்கள்— எதிர்ப்பு நடவடிக்கையாக பிரார்த்தனை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர் என்று ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே. (ஒ-எ)

### யாழ். பல்கலைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அநேகமாக ஒருவார காலம் அடையாளப் பகிஷ்கரிப்பு நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org